**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள்.30.10.2023

Case No.MCOP.125/2022

P.W.1

**திருமதி.முத்துலெட்சுமி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில்**

விபத்து நடந்த காலத்தில் நானும், என் கணவரும் மனஸ்தாபம் காரணமாக பிரிந்து வாழ்ந்தோம் என்றால் அது தவறு. விபத்து நடந்த அன்று என் கணவர் ஏரலில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வீட்டில் இருந்து சென்றார். என் கணவரின் பெற்றோர்கள் இருவரும் இறந்து விட்டனர். விபத்து நடந்த இடத்திற்கு பக்கத்தில் கடை வைத்திருந்தவர்கள், விபத்தை பார்த்தவர்கள் எனக்கு தகவல் சொன்னார்கள். விபத்து நடந்து 3 நாட்கள் கழித்து தான் எனக்கு விபத்து பற்றி தெரிய வந்தது. என் கணவரை மூன்று நாட்களாக நாங்கள் தேடினோம். என் கணவரின் போன் சுவிட்ச் ஆப் என தகவல் வந்தது. என் கணவர் காணாமல் போனதாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. என் கணவர் வெளியூர் சென்று 10 நாட்கள் கழித்து பொதுவாக வருவார் என்பதால் தான் நான் தேடவில்லை என்றால் அது தவறு. என் கணவருக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பின்புறம் என் கணவர் சென்று மோதினார் என்று காவல் துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் பொய்யான புகார் கொடுத்து அவ்வாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.4 மாதிரி வரைபடத்தில் சம்பவ இடமாக ரோட்டின் வலது புறம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் பின்னால் சென்று கொண்டிருந்த என் கணவர் மீது முன்னால் வந்த கார் திடீரென்று திரும்பி விபத்தை ஏற்படுத்தியது. என் கணவர் 1ம் எதிர்மனுதாரரின் காரை முந்தி செல்வதற்காக திடீரென்று திரும்பி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் அது தவறு. நான் தூத்துக்குடி, தாளமுத்துநகர் அருகே உள்ள சிலுவைப்பட்டி, கணபதி நகரில் வசிக்கிறேன். என் கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், அதனால் நாங்கள் இழப்பீடு கோர முடியாது என்றாலும் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில்**</u>

என் கணவர் டிரைவராக வேலை செய்தார். என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. என் கணவரின் ஓட்டுநர் உரிமம் தொலைந்து விட்டது. என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், என் கணவருக்கு வாகனத்தை ஓட்ட தெரியாமல் அதிவேகமாக சென்று முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றாலும் சரியல்ல. கணேசன் என்பவரிடம் என் கணவர் ஓட்டுநராக பணி செய்தார். என் கணவர் அவர் பணி செய்த கணேசனிடம் ஓட்டுநர் உரிமம் நகலை அளித்தாரா என்றால் எனக்கு அது தெரியாது. என் கணவர் மாதம் ரூ.20,000/- வருமானம் ஈட்டினார் என காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் இறந்த 6வது நாள் சடங்கு வைத்த போது தான் முதல் தகவல் அறிக்கை பற்றி எனக்கு தெரிய வந்தது. தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது சம்பந்தமாக காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு நான் மனு எதுவும் அளிக்கவில்லை என்றால் நான் மனு கொடுத்தேன். அவ்வாறு மனு கொடுத்ததற்கான ஆதாரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து குறித்த முதல் தகவல் அறிக்கையை ஆட்சேபித்து நான் எந்த மனுவும் கொடுக்காததால் தான் அது பற்றிய ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் அது சரியல்ல. என் கணவர் என் திருமணத்திற்கு முன்பு ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடியில் வசித்தார். நானும், என் கணவரும் 2 ஆண்டுகள் சிலுவைப்பட்டியில் வசித்தோம். என் கணவரின் ஆதார் அட்டை நகலை நான் தாக்கல் செய்ய தயார். நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் அது சரியல்ல. என் கணவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு எதுவும் எங்களுக்கு அளிக்க தேவையில்லை என்றால் அது சரியல்ல. என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் அது சரியல்ல. என் கணவர் ஓட்டி சென்ற வாகனம் யார் பெயரில் உள்ளது என எனக்கு தெரியாது. விபத்து சமயம் என் கணவர் ெஹல்மெட்

அணியாததால் தான் தலையில் காயம் ஏற்பட்டது என்றால் என் கணவர் ெஹல்மெட் அணிந்திருந்தார்.

**மறுவிசாரணை - இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

Sd/-M.Selvam,
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**